# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8066973

1. District : கோயம்புத்தூர் மாவட்டம் | PS: ஊ.த.க.பிரிவு காவல்நிலையம் | Year: 2019 ஆண்டு | FIR No.: 08/2019/AC/CB மு.த.அ. எண் | Date: 26/03/2019 0845 hrs நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by — Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Prevention of Corruption — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல் : 25.03.2019 மதியம் 1230 — Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் மதியம் 1250 hrs — Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.03.2019 — Time நேரம் : 1700 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 25.03.2019 — Time நேரம் : 1700 hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 6 கி.மீ தென் கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி தெற்கு தாசில்தார் அலுவலக வளாகம் கோயமுத்தூர்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. பாலசுப்பிரமணி வயது 63/2019
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
   (b) Father's/ Husband's Name : பழனிச்சாமி தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
   (d) Nationality : இந்தியன் நாட்டினம்
   (e) Passport No. : — வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
   Place of Issue : — வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : விவசாயம் தொழில்
   (g) Address : முகவரி கதவு எண் 11/1, பாலசுப்ரமணியம் வீதி, காமதேனு நகர், (மேற்கு). கே.கே.புதூர், கோயமுத்தூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   வெங்கடாசலபதி சர்வேயர், கண்ணம்பாளையம் கிராமம், சூலூர் தாலுகா, கோயமுத்தூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

26/3/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

26/03/2019
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

26.03.2019, 0006.

Name: பெயர் [illegible]
Rank: நிலை காவல் ஆய்வாளர்
[illegible]

<u>கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.8/2019/AC/CB u/s 7(a) of Prevention of Corruption Act 1988 as Amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி</u>

25.03.2019 ஆம் தேதி செவ்வாய்கிழமை மாலை 17.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோவை மாவட்டம் கே.ஆர்.புரம், காமதேனு நகர் (மேற்கு), பாலசுந்தரம் வீதி, கதவு எண்.11/1 ல் வசிக்கும் திரு.பழனிச்சாமி மகன் திரு.P.பாலதண்டபாணி, வயது–63, என்பவர் கணினியில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரினை கோயம்புத்தூர் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பரிவு அலுவலகத்திற்கு நேரில் ஆஜராகி கொடுத்தார். வாதியிடம் பொறிவைப்பு நடவடிக்கைக்கு விருப்பம் தெரிவித்தால் எதிரி கேட்ட லஞ்ச பணம் ரூ.24,000/– உடன் மறுநாள் 26.03.2019 ம் தேதி காலை 08.45 மணிக்கு கோவை ஊ.த.க அலுவலகத்திற்கு வரும்படி அறிவுறுத்தி அனுப்பி வைக்கப்பட்டது. அந்த புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளபட்டதில் எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும் புகாரில் சொல்லப்பட்டுள்ளது போல் புகார்தாரரிடம் எதிரி திரு.வெங்கட்டாசலபதி, சர்வேயர் லஞ்சமாக ரூ.24,000/– பணத்தை வாதி மற்றும் வாதியின் மனைவி பெயரில் உள்ள நிலங்களை உட்பிரிவு செய்து தனிப்பட்டாவாக தர வேண்டி கேட்டது தெரிகிறது. மேலும் புகார்தாரரின் முன்னடத்தை மற்றும் புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் ஏதும் உண்டா என்பது குறித்து மேற்கொண்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதும் இல்லை என்றும் அவரது புகார் நம்பகத்தன்மை கொண்டது என்றும் தெரியவந்தது. வாதி இன்று 26.03.2019 ம் தேதி காலை 08.40 மணிக்கு எதிரிகள் கேட்ட பணத்துடன் ஊ.த.க அலுவலகத்திற்கு வந்தும், தான் எதிரிக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பம் இல்லை என்றும், தான் பொறிவைப்பு நடவடிக்கைக்கு விருப்பம் தெரிவிப்பதாகவும் தெரிவித்தார். அதன்பேரில் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியாக ஒப்புதல் பெற்றும், இன்று 26.03.2019 ம் தேதி காலை 08.45 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.8/2019/AC/CB u/s 7(a) of Prevention of Corruption Act 1988 as Amended by the Prevention of Corruption (Amendment) Act 2018ன்படி மேற்படி எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புனர்–P.பாலதண்டபாணி, வயது–63, த/பெ பழனிச்சாமி, கதவு எண்.11/1, பாலசுந்தரம் வீதி, காமதேனு நகர் (மேற்கு), கே.ஆர்.புரம், கோயம்புத்தூர். பெறுநர்–ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு பிரிவு, கோயம்புத்தூர். அய்யா, நான் கோயம்புத்தூர் கே.ஆர்.புரம், காமதேனு நகர் (மேற்கு), பாலகந்தரம் வீதி, கதவு எண்.11/1 ல் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் கோவை, ஆர்.எஸ்.புரத்தில் கடந்த 35 வருடமாக சொந்தமாக டிராவல்ஸ் வைத்து நடத்தி வருகிறேன். நான் 19.07.2018 ஆம் தேதி சூலூர் கண்ணம்பாளையம் கிராமத்தில் சர்வே எண்.329/4, 5661 சதுர அடி கொண்ட இடத்தை எங்களது சொந்த உபயோகத்திற்காக எனது மற்றும் எனது மனைவி திருமதி.வேலுமணி பெயரில் கோவை நடுப்பாளையத்தை சேர்ந்த திரு.பழனிச்சாமி என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கினோம். மேற்படி இடமானது சூலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணம் எண்.7631/2018 தேதி

19.07.2018 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. அதே தேதியில் சூலூர் கண்ணம்பாளையம் கிராமத்தில் சர்வே எண்.329/4, 12 செண்ட் கொண்ட இடத்தை எங்களது சொந்த உபயோகத்திற்காக எனது மற்றும் எனது மனைவி திருமதி.வேலுமணி அவர்கள் பெயரிலும் கண்ணம்பாளையத்தை சேர்ந்த திரு.சிவக்குமார் என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கினோம். மேற்படி இடமானது சூலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணம் எண்.7626/2018 தேதி 19.07.2018 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் சில மாதங்களுக்கு முன்பு எனது மற்றும் எனது மனைவி பெயருக்கு மேற்படி நிலங்களை பெயர் மாற்றம் செய்து பட்டாவில் எங்களது பெயர்களை சேர்த்து கொண்டோம், அதனுடைய பட்டா எண்.1644 ஆகும். இந்நிலையில் கடந்த 11.01.2019 ஆம் தேதி மேற்படி எனது மற்றும் எனது மனைவி பெயரில் உள்ள நிலங்களை உட்பிரிவு செய்து தனிப்பட்டாவாக மாற்ற வேண்டி கோவை வடக்கு தாலுகா அலுவலகத்தில் உள்ள இ–சேவை மையத்திற்கு சென்று விண்ணப்பம் பெற்றும் அதை பூர்த்தி செய்து ஆன்லைன் மூலம் பதிவு செய்து அதன் நகலை பெற்றுக் கொண்டேன். அதனுடைய விண்ணப்ப எண்கள் 1) 2019/0105/12/056063 தேதி 11.01.2019 மற்றும் 2) 2019/0105/12/056064 தேதி 11.01.2019 ஆகும். அதன் பின்னர் சூலூர் தாலுகா அலுவலகம் வந்து சர்வேயர் திரு.ஏழுமலை அவர்களை சந்தித்து அப்போது அவரிடம் எங்களுடைய நிலங்களை உட்பிரிவு செய்ய வேண்டி அவரிடம் ஆன்லைனில் பதிவு செய்த நகல்கள் மற்றும் சம்மந்தப்பட்ட ஆவணங்களை விண்ணப்பத்துடன் இணைத்து கொடுத்தேன். அதனை பார்வையிட்டு உட்பிரிவு செய்ய வருவதாக சொன்னார். ஆனால் வராமல் காலதாமதப் படுத்தினார். அதன் பின்பு அதே அலுவலகத்தில் இருந்த சர்வேயர் திரு.பிரதாப் என்ற சர்வேயரை அணுகும்படி கூறினார். நானும் அவரை நேரில் சந்தித்து மேற்படி எங்களது நிலத்திற்கு உட்பிரிவு செய்ய வேண்டிய விவரத்தை கூறினேன். அவரும் உட்பிரிவு செய்ய வருவதாககூறி விட்டு வராமல் காலதாமதப்படுத்தினார். அதனை தொடர்ந்து சர்வேயர் திரு.பிரதாப் அவர்களுக்கு செல்போன் மூலம் தொடர்பு கொண்டு எனது நிலத்தை உட்பிரிவு செய்ய வேண்டி கேட்டபோது அவர் என்னிடம் திரு.வெங்கட்டாசலபதி என்ற சர்வேயர் கண்ணம்பாயைம் ஏரியாவிற்கு புதியதாக வந்துள்ளதாகவும் அவருடைய செல்போன் எண்.9843694309 ஐ கொடுத்து அவரை தொடர்பு கொண்டுவிட்டு நேரில் போய் பார்க்குமாறு சொன்னார். அதன்பேரில் நானும் கடந்த 19.03.2019 ஆம் தேதி காலை சுமார் 11 மணிக்கு சூலூர் தாலுக்கா அலுவலகத்திற்கு அருகில் சென்று சர்வேயர் திரு.வெங்கட்டாசலபதி அவர்களுக்கு என்னுடைய செல்போன் எண்.9364495959 மூலம் அவர் சூலூர் தாலுகா அலுவலகத்தில் இருப்பதை உறுதி செய்து கொண்டு நான் அங்கு சென்று நேரில் சந்தித்தேன். அப்போது அவரிடம் எங்களுடைய நிலங்களை உட்பிரிவு செய்ய வேண்டி அவரிடம் ஆன் லைனில் பதிவு செய்த நகல், பட்டா, வில்லங்க சான்றிதழ், பத்திரநகல், மூலம் பத்திரம் நகல், இடத்தின் வரைபடம் ஆகியவைற்றை விண்ணப்பத்துடன் இணைத்து கொடுத்தேன். அப்போது அவர் எனது விண்ணப்பம் மற்றும் அதனுடன் இணைத்திருந்த ஆவணங்களை பார்வையிட்டு நிலங்களை அளக்க வேண்டி நிலம் அமைந்துள்ள கண்ணம்பாளையம் கிராமத்திற்கு அவரே 21.03.2019 ஆம் தேதி காலை நேரில் வருவதாக கூறினார். அதன் பேரில் நானும் அங்கிருந்து புறப்பட்டுவிட்டேன். அதன்படி நானும் எங்களுடைய நிலம் அமைந்துள்ள கண்ணம்பாளையம் கிராமத்திற்கு 21.03.2019 ஆம் தேதி காலை சென்று சர்வேயருக்காக காத்திருந்தேன். அப்போது மதியம் சுமார் 02.30 மணிக்கு திரு.வெங்கட்டாசலபதி சர்வேயர் அவர்கள் அங்கு வந்து மேற்படி நிலத்தை அளந்து சென்றார். அதன் பின்பு இன்று 25.03.2019 ஆம் தேதி மதியம்

சுமார் 12.00 மணிக்கு சர்வேயர் திரு.வெங்கட்டாசலபதி அவர்களுடைய செல்போன் எண் 9843694309 க்கு என்னுடைய செல்போன் எண்.9363495959 லிருந்து தொடர்பு கொண்டு மேற்படி உட்பிரிவு சம்மந்தமாக பேசினேன். அவரும் மதியம் 12.30 க்கு கோவை தெற்கு தாலுகா அலுவலகத்திற்கு வந்து செல்போனில் அவரை தொடர்பு கொள்ளும் படி சொன்னார். அதன் படி நானும் மதியம் சுமார் 12.30 மணிக்கு அங்கு சென்று தொடர்பு கொண்டு பேசினேன். அப்போது அங்கு அவர் நேரில் வந்தார். அப்போது நான் அவரிடம் உட்பிரிவு சம்மந்தமான வேலையை சீக்கிரம் முடித்து தருமாறு கேட்டேன். அதற்கு அவர் நான் ரெடி செய்து வைத்துவிட்டேன், பணம் கொடுத்தீங்கனா ஆபீஸ்ல கொடுத்து வாங்கிக்கலாம் என்று சொன்னார். அதற்கு நான் எவ்வளவு அப்ராக்சிமேட்டா சொல்லுங்க என்று கேட்டேன். அதற்கு அவர் அப்ராக்சிமேட் எல்லாம் இல்லை, ஒரே ரேட் தான், ரூ.30,000/– கொடுத்துவிடுங்கள், சூலூர்ல மத்தவங்க எல்லாம் ஜாஸ்தியா கேட்டு வாங்றாங்க, நான் இப்பதான் புதுசா வந்திருக்கேன், அதுனாலதான் கம்மியா கேட்குறேன், கொடுத்துட்டு போங்க என்று சொன்னார். அதற்கு நான் என்னிடம் தற்போது அவ்வளவு பணம் இல்லை, என்னிடம் பணம் ரூ.1000/– மட்டுமே உள்ளது, இதை தற்போது வைத்து கொள்ளுங்கள் என்று கூறி அவரிடம் கொடுத்தேன். அவரும் அதனை பெற்று கொண்டு இல்லை சார் நீங்க பணம் கொடுத்தால் தான் எங்க ஆபிஸ்ல உள்ளவங்க வேலை செய்வாங்க, அங்கு கொடுக்கிறதற்காவது பணம் கொடுங்க, இல்லாட்டி வேலை செய்ய மாட்டாங்க. பணம் கொடுத்தால் தான் வேலையை முடித்து கொடுக்க முடியும் என்றார். அதற்கு நான் இப்ப இருந்திச்சுனா கொடுத்திருவேன் இப்ப கையில பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் சரி ரெடி பண்ணி வைக்கிறேன், பணம் கொடுத்துவிட்டு வந்து வாங்கிட்டு போங்க என்றார். நானும் சரி என்று சொல்லி வந்துவிட்டேன். மேற்படி எனக்கும் சர்வேயர் திரு.வெங்கட்டாசலபதிக்கும் இடையே நடந்த உரையாடல்களை எனது செல்போனில் வீடியோ பதிவு செய்துள்ளேன். பின்பு மீண்டும் சுமார் 12.50 மணிக்கு சர்வேயர் திரு.வெங்கட்டாசலபதிக்கு அவரது செல்போனிற்கு தொடர்பு கொண்டு அவர் கேட்ட ரூ.30,000/– ல் ஏதாவது கொஞ்சம் கம்மி பண்ணி சொல்லுங்களேன் என்று கேட்டேன். அதற்கு அவர் நானே கம்மியாகதான் சொல்லியுள்ளேன் என்று சொன்னார். நான் அவரிடம் கம்மி பண்ணி சொல்லுங்களேன் என்று மீண்டும் கேட்டேன். அதற்கு அவர் யோசித்து விட்டு, 25 கொடுத்திடுங்க என்று சொன்னார். நான் இருபத்தி ஐந்து ஆயிரம் ரூபாயா என்று கேட்டேன், அதற்கு அவர் ஆமாம் என்று சொன்னார். நான் ஏற்கனவே ரூ.1000/– கொடுத்திருக்கிறேன் என்று சொல்லி வேறு வழியில்லாததால் மீதி பணம் ரூ.24,000/– ஐ கொடுக்கிறேன் என்று சொன்னேன். அதற்கு அவரும் சரி என்று சொன்னார். மேற்படி செல்போனில் பேசிய உரையாடல்களை எனது செல்போனில் பதிவு செய்தேன். நான் யோசித்து பார்த்ததில் பணம் ரூ.24,000/– ஐ சர்வேயர் திரு.வெங்கட்டாசலபதி லஞ்சமாக கொடுத்து எனது மற்றும் எனது மனைவி பெயரில் உள்ள நிலங்களை உட்பிரிவு செய்து தனிப்பட்டாவாக மாற்ற விருப்பம் இல்லை. எனவே என்னிடம் உட்பிரிவு செய்து தனிப்பட்டாவாக மாற்றி தருவது சம்மந்தமான வேலையை முடித்து தர ரூ.24,000/– லஞ்சம் கேட்ட சர்வேயர் திரு.வெங்கட்டாசலபதி என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இடம் – கோவை, நாள் – 25.03.2019. இப்படிக்கு ஒப்பம் (x/x/x/) 25/03/19 (P.பாலதண்டபாணி). Sir, Received the complaint on 25.03.2019 at 17.00 hrs Sd/- (x/x/x) G.Arumugam, Inspector of Police, V&AC, Coimbatore. Sir, After conducting Discreet enquiry, registered a case in Coimbatore V&AC, Cr.No.08/2019/AC/CB u/s 7(a) of Prevention of

Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 on 26.03.2019 at 08.45 hrs by me. Sd/- (x/x/x) G.Arumugam, Inspector of Police, V&AC, Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

26/3/2019

(G.ஆறுமுகம்)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்